**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP No.282/2023**

நாள். 27.03.2025

ம.**சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6 ம் வகுப்பு. இறந்த ஜெயபிராகஷ்க்கு பிறகு எனக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருடைய பழக்க வழக்கம் பிடிக்காமல் ஒதுங்கிவிட்டேன். இறந்த ஜெயபிராகஷ் என்ன வேலை பார்த்தார் என்பதற்கான விபரத்தை நான் மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கொத்தனார் வேலை பார்க்கிறார். கொத்தனார் வேலை பார்ப்பதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய முன்னால் கணவர் வாகனத்தை ஓட்டும் போது ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளாரா அந்த உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.எனது கணவர் வாகனததை ஓட்டும்போது தலைகவசம் ஏதும் அணியவில்லை என்றால் சரிதான். எனது முன்னால் கணவர் விபத்தில் இறந்தவிட்டது குறித்து குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் ராமலிங்கம் என்பவர் விபத்திற்கு காரணம் இல்லை என்று சொல்லி விடுதலை செய்யப்பட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது பெண் குழந்தையை நான் பராமரிக்கவில்லை என்றும், எனக்கு மனுவில் கோரியபடி எந்த நஷ்ட ஈடு தொகையும் கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவர் இறந்த பிறகு இரண்டாவதாக திருமணம் செய்து

கொண்டு வாழந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது முன்னால் கணவர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்றும், அந்த விபத்திற்கு எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் மனுவில் கோரியுள்ளபடி எனக்கு நஷ்ட ஈடு தொகை கிடைக்க கூடியது அல்ல என்றும், நான் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவர் உயிருடன் இருக்கும்போது மறைத்து பொய்யாக வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 108 ஆம்புலன்சில் சென்றதாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தில் எனக்கு நெற்றி, பற்கள் உடைந்துவிட்டது. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் நெற்றி, பற்கள் உடைந்து விட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம், காப்பீடு பாலிசி மற்றும் தலைகவசம் அணிந்து சென்றதால் அதற்கு எந்தவிதமான காயங்கள் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராமலிங்கத்திற்கு காயம் ஏற்பட்டது அவரும் மருத்துவமனையில் இருந்தார். ராமலிங்கத்திற்கு காயம் ஏற்பட்டது குறித்து ஆவணங்கள் ஏதும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விபத்திற்கு எனது கணவர்தான் காரணம் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். அதனால் மருத்துவ பில்கள் கொடுக்கவில்லை. இந்த விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றும், மனுவில் கோரியபடி நஷ்ட ஈடு தொகை கிடைக்க கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என சொல்லி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் CC No. 3/2016 வழக்கில் குற்றவாளி இல்லை என 20.07.2019ல் விடுதலை செய்யப்பட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பை எதிர்த்து நான் மேல் முறையீடு செய்தேனா என்றால் இல்லை. நான் சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால் விபத்து நஷ்ட ஈடு கோரி முடியாது என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் தான் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN 50 B 6791 என்ற இருசக்கர வாகனத்தை எனது கணவர் ஜெயபிரகாஷ் ஓட்டினார். நான் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன். என் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் மெதுவாகதான் ஓட்டிசென்றார். வேலூர் புலியமரம் விஜி டீக்கடையின் அருகில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலை விதிகளை அனுசரித்து சென்றுக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 E 3915 என்ற Hero Honda Splenderயை 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி

எனது கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். இந்த விபரத்தை தான் காவல் நிலையத்தில் புகாரில் சொல்லியுள்ளேன். புகார் கொடுத்தது நான்தான். விபத்திற்கு காரணம் TN 51 E 3915 என்ற 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். விபத்து காரணம் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் என்பதால் எங்களுக்கு நஷ்ட ஈடு தொகையும், 1,2 எதிர்மனுதாரர்கள் நஷ்ட கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு இந்த விபத்திற்கும் எந்த பொருப்பும் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் 3ம் எதிர்மனுதாரர் ஆவார். 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1,2 எதிர்மனுதாரர்கள்தான் காரணம் என்றால் சரிதான். 3,4 எதிர்மனுதார்களை இந்த வழக்கில் சேர்த்தது தவறு என்றும், தேவையில்லாத தரப்பினர்கள் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.எனது கணவர் ஓட்டி சென்ற வாகனம் 4ம் எதிர்மனுதாரரிடம் காப்புறுதி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வயது, வருமானம் மற்றும் தொழில் குறித்து ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் விவசாய கூலி வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– சம்பாரித்து வந்தார் என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை மிக மிக அதிகம் என்றும் அதை 4ம் எதிர்மனுதார் கொடுக்க கடமை

பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதரணம் காயம் அதுவும் நாளடைவில் பூர்ண குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.